(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW3 |
| Name | : | மாதவன் |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **6th February 2024.**

(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u> :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டத்தில் நிலவரி திட்ட உதவியாளராக பணிபுரிந்து மார்ச் 2019 ல் பணிஓய்வு பெற்றுவிட்டேன். 17.02.2011 முதல் மித்ரா வயல் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அதுசமயம் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து R.C.50/10, 08.08.2012 ம் தேதியிட்ட கடிதம் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டிருந்தது. அது தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மூலம் எனக்கு கிடைத்தது. அதில் சண்முகசுந்தரம் த/பெ குப்புசாமி அண்டக்குடி கிராமம் தற்போதைய இருப்பு கோட்டையூர் ஸ்ரீராம் நகர், அவரின் மனைவி பாக்கியலட்சுமி மகன்கள் பகீரதன், பார்த்திபன், மகள் அகிலாண்டேஸ்வரி, சண்முகசுந்தரத்தின் சகோதரர் குணசேகரன் அவரது மனைவி சாந்தி , மைத்துனர் கேசவன் அவரது மனைவி சொர்ணம் மற்றும் மாறன், முத்துப்பாண்டி ஆகியோரின் பெயரில் உள்ள நஞ்சை புன்சை நிலங்களின் விபரம் கோரப்பட்டிருந்தது.

2. வட்டாட்சியரின் அறிவுறையின் படி நான் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மித்ரா வயல் தமிழ்செல்வி, செங்காத்தக்குடி கிராம நிர்வாக அலுவலர் உதயகுமார் ஆகியோரிடம் தகவல் தெரிவித்து மேற்படி

நபர்கள் பெயரில் உள்ள சொத்துக்களை உரிய படிவம் மூலம் அனுப்பும் படி கேட்டுக்கொண்டேன். அவர்கள் அனுப்பிய பின்பு அதனை நான் பெற்று கடிதம் மூலம் வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ. 2 மற்றும் 13 கோப்பில் உள்ள கடிதம் என்னுடையதுதான். இதுதொடர்பாக 06.02.2013 அன்று காவல் துணைக் கண்காணிப்பாளர் என்னிடம் விசாரணை செய்தார். நடந்ததைச் சொன்னே.

**<u>குறுக்கு விசாரணை</u>**:

1. மித்ரா வயல் குரூப் மற்றும் செங்காத்தக்குடியில் நான் மேலே சொன்ன நபர்கள் பெயரில் உள்ள சொத்துக்களை நான் நேரில் பார்வையிடவில்லை. அதனால் அந்தச் சொத்துக்களில் என்னென்ன விவசாயம் செய்யப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை கிரையம் வாங்கியவர் அந்தசொத்திற்கான பட்டாவை பல ஆண்டுகளாக மாற்றம் செய்யாமல் இருப்பதும் உண்டு என்றால் சரிதான்.

2. புஞ்சை நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட எந்த விவசாயத்தையும் சாகுபடி கணக்கில் எழுதும் வழக்கம் இல்லை என்றால் சரிதான்.

தென்னை போன்ற தோப்புகளுக்கு இடையில் வாழை, தர்பூசணி, தட்டைப்பயிர் மற்றும் ஊடுபயிர்கள் விளைவிப்பது வழக்கம் என்றால் சரிதான். அப்படி சாகுபடி செய்யப்பட்ட ஊடுபயிர் குறித்து சாகுபடி அடங்கலில் குறிப்பு வருமா என்றால் நெற்பயிர் மற்றும் நெல் அறுவடை குறித்து மட்டும் குறிப்பிடப்படும். பொதுவாக, அறுவடை சமயத்தில் விளைந்த பொருட்களை விற்றால் குறைவான விலைக்கு விற்கப்படும் என்றாலும் நிலுவையில் வைத்து விற்றால் கூடுதல் விலைக்கு விற்கப்படும் என்றால் சரிதான்.

3. பெரும்பாலும், கிராம நிர்வாக அதிகாரிகள் ஒவ்வொரு சொத்திலும் என்னென்ன விதைத்துள்ளார்கள் என்று குறிப்பிடும் வழக்கம் இல்லை. அதற்கு மாறாக, தோராயமாக கண்மாய் கரையில் நின்று ஒட்டுமொத்த விளைநிலங்களையும் பார்த்துவிட்டு வருவார்கள். ஆகவே, அவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்பு சரியானது என்று சொல்ல முடியாது. சொத்து ஒருநபர் பெயரிலும் அதே சொத்திற்கு பட்டா வேறொரு பெயரிலும் அதே சொத்தை வேறொரு நபர் சாகுபடி செய்வதும் வழக்கம் என்றால் சரிதான்.

4. ஒரு சொத்தில் ஒரு நபர் உழவடைதாரராக சாகுபடி செய்து வந்தால் அப்படி சாகுபடி செய்யும் நபர் பெயரை கணக்கில் குறிப்பிடாது

என்றால் உழவடைதாரர் என்று பட்டாவில் இருந்தால் கணக்கில் குறிப்பிடப்படும். அவ்வாறு கணக்கில் அந்த நபர் குறிப்பிடப்படவில்லை என்றால் அவர் விவசாயம் செய்தவராக இருந்தாலும் அவர் பெயர் கணக்கில் குறிப்பிடப்படாது என்றால் சரிதான். எதிரிகள் சண்முகசுந்தரம் அவரது மனைவி பாக்கியலட்சுமி மற்றும் அவரது குழந்தைகளுக்கான சொத்துக்களில் கிணறும் போர்வெல்லும் அவைகளிலிருந்து 24 மணிநேரமும் தண்ணீர் ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய வசதியும் உள்ளதா என்றால் நான் அந்த சொத்துக்களை நேரில் பார்க்காததால் எனக்கு தெரியாது, கிராம நிர்வாக அலுவலருக்கு தான் தெரியும். சண்முகசுந்தரம் விவசாயம் சம்பந்தப்பட்ட படிப்பு படித்து விட்டு முதன்முதலில் அந்த பகுதிகளில் அவரும் அவரது குடும்பத்தாரும் பண்ணை விவசாயம் செய்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவரது சொத்துக்களில் தென்னை, முந்திரி, தைலமரம் விவசாயம் செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி ஞாபகம் இல்லை.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.02.06 17:21:04 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.